


**15.11. 2024**

தலைப்புச் செய்திகள்

1. பழங்குடியின மக்களின் பாரம்பரியத்தை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தேர்வு முறையில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசுடன் மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டுமென்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரியலூர் மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுகுடிநீர் திட்டம் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் நோயற்ற எதிர்கால தலைமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

5. இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான 4-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி **Johannesburg**-ல் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டில் பழங்குடியின மக்களின் பாரம்பரியத்தை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பகவான் பிர்சாமுண்டாவின் 150-வது பிறந்த தினமான பழங்குடியினர் பெருமை விழாவை ஒட்டி பீஹார் மாநிலம் ஜமுயில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைத்து பேசியஅவர், பழங்குடியின மக்களின் நலனுக்காக தனிஅமைச்சகம் பி.ஜே.பி. அரசால் உருவாக்கப்பட்டத்தை சுட்டிக்காட்டினார்.

பழங்குடியின மக்கள் நாட்டிற்கு ஆற்றிய பல்வேறு சேவைகளை கவுரவிக்கும் வகையில் கலை மற்றும் கலாச்சார பிரிவுகளில் பத்ம விருதுகள் வழங்கப்படுவதாகவும், அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டதையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

பழங்குடியின மக்களின் பாரம்பரிய மருத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில் அருணாச்சல பிரதேசத்தில் இதுதொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பிர்சா முண்டாவை கவுரவிக்கும் வகையில் நினைவு நாணயம் மற்றும் தபால் தலையையும் அவர் வெளியிட்டார்.

பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் கீழ் 11 ஆயிரம் வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கிய அவர், 30 நடமாடும் மருத்துவ பிரிவுகளையும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி ஆகாஷவாணியில் நேரடியாக ஒலிபரப்ப பட்டதையடுத்து, நண்பகல் 12.40 மணிக்கு ஒலிபரப்பாக இருந்த மாநில செய்தியறிக்கை பிற்பகல் 3 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

❖❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

நாட்டில் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பன்சேரா பூங்காவில் பகவான் பிர்சாமுண்டாவின் திருவுருவச்சிலையை இன்று திறந்து வைத்து பேசியஅவர், அன்னாரது அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்குவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக இன்றுகாலை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பகவான் பிர்சா முண்டாவின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖

<u>மதிவேந்தன்</u>

பழங்குடியினர் பெருமைதின விழாவையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியின பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழாவை மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் இன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னையில் நடைபெறும் மருத்துவமுகாமில் மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>தர்மேந்திர பிரதான்</u>

நாட்டில் தேர்வு முறையில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசுடன் மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டுமென்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் இன்று இந்தியன் ஸ்கூல் ஆ.்.ப் பிசினஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியஅவர், டாக்டர் ராதாகிருஷ்ணா கமிட்டியின் பரிந்துரையின் படி நுழைவுத்தேர்வு முறையில் மாற்றங்கள் பரிந்துரைக்கப்படும் என்று கூறினார்

குளறுபடி ஏற்படாத வகையில் பிழையில்லாத நுழைவுத்தேர்வு முறையை அமல்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர் - போடோலாந்து பெருவிழா

பிரதமர் திரு. நரேந்திரமோடி முதலாவது போடோலாந்து பெருவிழாவை புதுதில்லியில் இன்றுமாலை தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகிறார்.

2 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அசாம், மேற்குவங்கம், நேபாளம், மற்றும் வடகிழக்கின் சர்வதேச எல்லை பகுதிகளில் வசிக்கும் பூர்வீக போடோ மக்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாக கொண்டு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

குருநானக்

சீக்கிய மதத்தை தோற்றுவித்த குருநானக்கின் 555-வது பிறந்த நாளான குருநானக் ஜெயந்தி நாடுமுழுவதும் உள்ள சீக்கியர்களால் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பஞ்சாப் அமிர்தசரஸ் பொற்கோவில் உட்பட நாடுமுழுவதும் குருத்வாராக்களில் சீக்கியர்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு புதிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் கொல்லாபுரத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், அரசால் அறிவிக்கப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து களஆய்வு மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

கடந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு உள்ளதாக கூறிய முதலமைச்சர் மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

அரியலூர் மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுகுடிநீர் திட்டம் மேம்படுத்தப்படும் என்றும்,

அரியலூர் ஆட்சித்தலைவர் வளாகத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீயணைப்பு அலுவலகம் கட்டப்படும்,

35 சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டித்தரப்படும்,

பெரம்பலூர் மருதையாற்றில் 24 கோடி ரூபாய் செலவில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் உள்ளிட்ட புதிய அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சிப்காட் தொழில்பூங்காவில் தைவான் நாட்டை சேர்ந்த நிறுவனத்துடன் இணைந்து, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலணி உற்பத்தி தொழிற்சாலைக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிறுவனத்தின் மூலமாக 15 ஆயிரம் இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தொடர்ந்து வாரணவாசி அங்கன்வாடி மையத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் 120 கோடி ரூபாய் மதிப்பிலான 53 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர், 88 கோடி ரூபாய் மதிப்பில் 507 முடிவுற்ற பணிகளையும் தொடங்கி வைத்தார்.

மொத்தம் 174 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 21 ஆயிரத்து 862 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

<u>தங்கம் தென்னரசு</u>

தமிழகத்தில் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்குவதன் மூலமாக நோயற்ற எதிர்கால தலைமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்

விருதுநகர் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 200 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்களிலிருந்து எதிர்கொள்ளும் வகையில் ஆற்றல்மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதுபோன்ற பெட்டகங்களை வழங்கி நோயற்ற தலைமுறையை உருவாக்க வேண்டியது நம் கடமை என்று அவர் எடுத்துரைத்தார்

❖❖❖❖❖❖❖

<u>துரைமுருகன்</u>

தமிழக கூட்டுறவுத்துறையில் காலத்திற்கு ஏற்ப புதிய தொழில்நுட்பங்கள் மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 71-வது கூட்டுறவு வாரவிழாவில் இன்று பங்கேற்று பேசியஅவர், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுறவு கடன்களில் 87 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகையை ஒட்டி நியாய விலை கடைகள் மூலம் பொருட்கள் வழங்கப்படவுள்ள நிலையில், அங்கு அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

<u>சேகர்பாபு</u>

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் கட்டப்படும் புதிய குடியிருப்புகளில் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தகுதியான நபர்களுக்கு மட்டுமே குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார்.

சென்னை வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஆயிரத்து 476 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை முதலமைச்சர் விரைவில் தொடங்கி வைப்பார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

நாசர்

இலங்கை தமிழரின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் தெரிவித்துள்ளார்.

சென்னை புழல் காவாங்கரை இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் 2 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 40 பேருக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கிய அவர், எஞ்சியுள்ள குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த முகாம் நாளை, நாளை மறுநாள், வரும் 23, 24 ஆகிய தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறவுள்ளது.

வரும் ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு நடைபெறும் இம்முகாம்களில் புதிய வாக்காளர்கள் தங்களது பெயரை பதிவுசெய்து கொள்ளலாம்.

மேலும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைத்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை பெறுதல் ஆகிய திருத்தங்களை இம்முகாமில் மேற்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

ராமதாஸ்

வேளாண் மாணாக்கரை டிஜிட்டல் பயிர் ஆய்வு பணிகளிலிருந்து தமிழக அரசு விடுவிக்க வேண்டுமென்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பணிகளை கிராம நிர்வாக அலுவலர்கள் அல்லது தனியார் நிறுவனங்களை கொண்டு மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

சட்டமன்ற குழு

மனுநீதி சோழனின் புகழை வருங்கால தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் அவரது கற்சிலை திருவாரூரில் அமைக்க அரசிடம் பரிந்துரைக்கப்படும் என்று சட்டப்பேரவை மனுக்கள் குழு தலைவர் திரு. காந்திராஜன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக இன்று ஆய்வு மேற்கொண்ட குழுவினர், திருத்துறைபூண்டி அரசு மாணவர் விடுதிக்கு தேவையான மேம்பாட்டு வசதிகள் செய்து தர அறிவுறுத்தியுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

கடைமுக தீர்த்தவாரி

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஐப்பசிமாத துலா உற்சவத்தை ஒட்டி இன்று நடைபெறும் கடைமுக தீர்த்தவாரி ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று புனித நீராடி வருகின்றனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

அன்னாபிஷேகம்

ஐப்பசி பௌர்ணமியை முன்னிட்டு சிவாலயங்களில் அன்னாபிஷேக விழா இன்று பக்தி சிரத்தையுடன் நடைபெறுகிறது.

தஞ்சை பிரகதீஸ்வரர் திருக்கோவிலில் ஆயிரம் கிலோ அரிசியை கொண்டு பிரம்மாண்ட அன்னாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் பிரம்மாண்ட அன்னாபிஷேகத்தை காண அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்

திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் சுவாமி, திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோவில்களிலும் இன்று அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

வானிலை

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, பெரம்பலூர், மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட 22 மாவட்டங்களில் அடுத்த சிலமணி நேரங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை காரணமாக திருச்செந்தூர் கடற்கரையில் தங்கி பவுர்ணமி தரிசனம் செய்வதை பக்தர்கள் தவிர்க்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான 4-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி **Johannesburg**-ல் இன்று நடைபெறுகிறது.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖